சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் சாதிக் அறக்கட்டளைச் சொற்பொழிவு!

ஆசிரியர்களும் மாணவர்களும் ஆளுநரை எதிர்த்துப் போராட வேண்டும்!

பேராசிரியர் மா.செல்வராசன் அறிவுறுத்தல்!

சென்னை, பிப்.14-

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையில் மேனாள் துணை வேந்தர் சே.சாதிக் தமது சொந்தப் பணம் ஐந்து இலட்சம் உரூபா நன்கொடையில் நிறுவியுள்ள பேராசிரியர் சாதிக் அறக்கட்டளையின் சார்பில் ஆண்டு தோறும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படைப்புகள் பற்றி ஆய்வுரை நிகழ்த்த வேண்டும் என்ற விதிப்படி அறக்கட்டளை முதற் சொற்பொழிவு 10-02-2026 செவ்வாய் முற்பகல் சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகப் பவளவிழாக் கலையரங்கில் நடைபெற்றது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சே.சாதிக் அறக்கட்டளையின் சார்பில் பாரதிதாசன் பற்றிய முதற் சொற்பொழிவை பேராசிரியர் மா.செல்வராசன் ஆற்றினார். உடன் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சே.சாதிக், பேராசிரியர் ய.மணிகண்டன் முனைவர் வாணி அறிவாளன், முனைவர் நிர்மலர்ச் செல்வி ஆகியோர் உள்ளனர். வருகை புரிந்தோர்க்கு அன்பளிப்பாக 'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்' என்னும் நூல் வழங்கப்பட்டது.

மேனாள் துணைவேந்தர் சே.சாதிக் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர் சென்னைப் பல்கலைக்கழக ஓய்வாசிரியர் பேரவைத் தலைவர், கலைஞர் செம்மொழித் தமிழ் விருதாளர் பேராசிரியர் மா.செல்வராசன் புரட்சிக் கவிஞர் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அதன் ஒரு பகுதி வருமாறு!

கனக சுப்புரத்தினம் என்னும் இயற்பெயர் கொண்டவர், கவிதை ஆர்வத்தால்,கனலான கவிஞர் பாரதியின் மேலிருந்த கட்டற்ற பற்றினால் பாரதிதாசன் என்று பெயர் சூட்டிக்கொண்ட பின்னர் கவிதை, கட்டுரை,நாடகம்,திரைப்பட உரையாடல் எனப் பற்பல இலக்கிய வகைகளைப் படைத்தார்.

பாரதிதாசன் பழம்போக்கில் இருந்து விலகி மக்கள் புதுப் போக்கில போக வேண்டும் என்று மன மாற்றம் பெற்றார். அதனால் கதர்ப் பாட்டுப் பாடியவர். பிறகு கருஞ் சட்டை பற்றிப் பாடினார், சுப்பிர மணியர் துதியமுது பாடியவர் சுயமரியாதை பற்றி பாடினார் தமிழ் தமிழர் தமிழ்நாடு முன்னேற்றமே அவர் பாடல்களின் தலையாய பொருளாக இருக்கிறது. அதனால் மொழிப் புலவராக, இனப் புலவராக, நாட்டுப் புலவராக உணர்ச்சி மிக்க கவிஞராக உருவானார்.

தந்தை பெரியார் ஈர்ப்பால் சாதி, சமயம் , கடவுள் கோயில், தனியுடைமை, ஆரியம், சமற்கிருதம், வடவர் மேலாண்மை, அடிமை நிலை குறிப்பாகப் பெண்ணடிமை முதலாளித்துவம், இந்தித் திணிப்பு எனத் தமிழர்க்கு எதிரான நிலைமைகளை எதிர்த்து எரிமலையாகப் பொங்கியவர், எழுச்சியாகக் கவிதைகளைத் தீட்டியவர் . சுயமரியாதைச் சுடராகத் துலங்கிய பாரதிதாசனுக்கு பேரறிஞர் அண்ணா 1946 ஆம் ஆண்டு சென்னையில் மாபெரும் விழா நடத்தி இருபத்தைந்து ஆயிரம் பொற்கிழி அளித்துப் புரட்சிக் கவிஞர் திராவிடக் கவி என்று போற்றினார் .

புரட்சிக் கவிஞர் இயற்கையை அழகின் சிரிப்பாகக் கண்டவர். தமிழ் எல்லாத் துறைகளிலும் இடம் பெற வேண்டும் என்று தமிழியக்கம் முழங்கியவர், காதலைப் பாடியவர், கலப்பு மணத்தை வரவேற்றவர், கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தவர்

சாதியை எதிர்த்தவர், மதங்களை வெறுத்தவர்

கடவுளை மறுத்தவர்

பொதுவுடைமையைப்

போற்றியவர், சமத்துவம் சாற்றியவர் , தொழிலாளரைப் போற்றியவர்,

உரிமை உணர்ச்சி எழுப்பியவர்,விடுதலைப் பண் மீட்டியவர் இசையமுது வழங்கியவர், புரட்சிக் கவிஞர் .

வடக்கு எப்போதும் தமிழர்க்கு இடக்குச் செய்வதே இலட்சியமாய் இருக்கிறது. வடக்கிலிருந்து வந்த ஆரியம் சமற்கிருதம், படையெடுப்புகள் , இந்தி என்று எல்லாமே தமிழ் தமிழர்க்கு, தமிழ்நாட்டுக்கு எதிராக இருக்கின்றன என்பதால் பொறிகிளப்பும் கவிதைகளால் எதிர்த்தார்,இளைஞர்களை எழுப்பினார்.அப்படித்தான் திருவாரூரில் இளமையில் கலைஞர் தொடங்கிய தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்திற்கு வழங்கிய வாழ்த்துக் கவிதை எழுச்சி மிக்கதாக உள்ளது.

"கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம், கிழித்தெறியத் தேடு துகாண் பகைக் கூட்டத்தை என்று முரசொலிக் கின்றார்.

இன்றைய நிலையை எண்ணுங்கள்.

இந்தியாவின் மூத்த முதல் பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் சிறப்புகளுள் ஒன்றாகத் திகழ்வது .பழம் பெருமை வாய்ந்த 170 ஆண்டுகள் ஆன, ஒரு காலம் உலகப் புகழ்பெற்றிருந்த இந்தப் பல்கலைக்கழகம் ஒரு துணைவேந்தர் இல்லாமல் மூன்று ஆண்டுகளாக முடங்கிக் கிடக்கிறது. நிருவாகம் நீர்த்துப் போய்விட்டது. ஜ.ஏ.எசு அலுவலர் கைகளில் அகப்பட்டு அல்லற்படுகிறது இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஆசிரியர்களும் மாணவர்களும் ஆராய வேண்டாமா? வடக்கின் ஏவலராக வந்துள்ள ஒன்றிய அரசின் ஊதுகுழலாக உள்ள ஆளுநர் தான் காரணம் என்று அறிந்த பிறகு ஆசிரியர்களும் மாணவர்களும் ஆளுநரை எதிர்த்துப் போராட வேண்டாமா? அமைதியாக இருப்பது தான் கல்வியின் அடையாளமா?

தலைவர் இல்லாத நிறுவனமோ , நிலையமோ, இயக்கமோ, அமைப்போ தள்ளாடத்தானே செய்யும். திருவள்ளுவர் "நிலை மக்கள் சால உடைத்தெனினும் தானை தலைமக்கள் இவ்வழி இல்

என்னும் குறளில் சொல்வது போல் தலைவர் இல்லையேல் எல்லாம் தவிடு பொடி தான்!

கொடுமையை எதிர்க்க வேண்டும், குற்றத்தை எதிர்க்க வேண்டும். கொள்ளையை எதிர்க்க வேண்டும் கொடுங்கோன்மையை எதிர்க்க வேண்டும் என்று கவிதைகள் மூலம் கனற்குரல் எழுப்புகின்றார்.

பாரதிதாசன் பாடத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் கற்றுக் கொள்ள வேண்டும். சீர்சால் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தத்திற்குப் பிறகும் அரசுக்குத் தடையாகச் செயற்படும் ஆளுநரின் வல்லாண்மையை ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்க்க வேண்டும், ஆர்ப்பாட்டம் போராட்டம் நிகழ்த்த வேண்டும், தேவையென்றால் நீதிமன்றத்தை நாட வேண்டும். இல்லையெனில் உள்ள நிலைமையை ஒரு போதும் மாற்ற முடியாது. மாற்றுங்கள் மடமையை, அறியாமையை,மூட நம்பிக்கையை, கண்மூடித் தனத்தை அடியோடு மாற்றுங்கள், தலைகீழ் ஆக்குங்கள்! அது தான் புரட்சி என்கிறார் பாரதிதாசன்.

இருக்கும்நிலைமாற்றுமொரு புரட்சிமனப் பான்மை எல்லோர்க்கும் எழவேண்டும் என்கின்றார் . குறிப்பாக ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் வேண்டும்.

இந்திதான் ஆட்சி மொழி என்று சட்டம் இயற்றிய போது 1965 ஆம் ஆண்டு கிளர்ச்சியும் புரட்சியும் செய்தார்கள் மாணவர்கள். அதனால்தான் இந்தித்திணிப்பை முன்னெடுத்த ஆட்சி இல்லாமல் போனது: இருமொழிக் கொள்கை ஆனது தமிழர் தலைநிமிரும் பேரறிஞர் அண்ணா ஆட்சி பிறந்தது. இன்று வரை மாட்சி நீள்கிறது .

எனவே அறிவாளர்களான ஆசிரியர்களும் மாணவர்களும் அச்சத்தை விட வேண்டும், அஞ்சாமை பெற வேண்டும் பல்கலைக்கழகத்திற்கு ஒரு துணை வேந்தர் வர வேண்டும் அதற்காக வடக்கை எதிர்த்து அதன் வஞ்சகத்தை, வல்லாண்மையை எதிர்த்துப் போராட வேண்டும். புரட்சிக் கவிஞர் புகல்வது போல் எதிர்ப்பால் வலிமை பெருகும் தெளிவு பிறக்கும் ,இறுதியில் வெற்றி கிடைக்கும் என்பதை உணருங்கள் !

இவ்வாறு பேராசிரியர். மா செல்வராசன் பேசினார்.

முன்னதாக பேராசிரியர் சாதிக் தமக்குப் பாரதிதாசன் மீது இளமையிலேயே பற்று ஏற்பட்டதை விரிவாக எடுத்துரைத்தார்.

பேராசிரியர் ய.மணிகண்டன் வரவேற்புரை நிகழ்த்தினார் முனைவர் வாணி அறிவாளன் நன்றி கூறினார் முன்னாள் துணைவேந்தர்களும் பெரும் பேராசிரியர்களும் பாரதிதாசன் ஆர்வலர்களும் மாணவர்களும் திரண்டு அரங்கு வழிந்தது. பேராசிரியர் மா.செல்வ ராசன் எழுதிய பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் என்னும் டாக்டர் பட்ட ஆய்வு நூலை வருகை புரிந்த அனைவர்க்கும் பேரா சே சாதிக் அறக்கட்டளை அன்பளிப்பாக வழங்கியது.

ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு – தொழில் முனைவோர்

பயிற்சித் திட்டத்தில் நடந்த முறைகேடுகள் - அதனை நிவர்த்தி செய்த நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப். 14-

ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) எனும் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் பயிற்சித் திட்ட செயலாக்கத்தில், குறைந்த வேலை வாய்ப்பு, தகுதி விதிமுறைகளை மீறுதல், பயனாளிகளின் பதிவுகளை நகல் செய்தல், பயிற்சி மையங்களை மூடுதல் மற்றும் பலவீனமான கண்காணிப்பு பொறிமுறைகள் உள்ளிட்ட கடுமையான குறைபாடுகளை கம்ப்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் (சிஏஜி) இந்திய தணிக்கை மற்றும் பட்டயக்கணக்காளர் ஜெனரல் தனது அறிக்கையில் எடுத்துரைத்துள்ளதா?

அப்படியானால், மாநில வாரியாக CAG அறிக்கை அளித்த கண்டுபிடிப்புகளின் விவரங்கள் தருக?

PMKVY இன் கீழ் அதிக அளவு செலவழிக்கப்படாத நிதிகள் மற்றும் நிலுவையில் உள்ள தொகை (பேஅவுட்கள்) ஆகியவை PMKVYன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளதா?

தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (என்எஸ்டிசி) மற்றும் மாநிலத் திறன் பணிகள் உட்பட செயல்படுத்தும் முகவர் மீது அரசாங்கம் ஏதேனும் பொறுப்புக்கூறலை நிர்ணயித்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

வெளிப்படைத்தன்மை, சிறந்த நிதிப் பயன்பாடு, நம்பகமான பயனாளிகளின் தரவு மற்றும் இத்திட்டத்தின் நடப்பு மற்றும் எதிர்காலக் கட்டங்களில் மேம்படுத்தப்பட்ட வேலை வாய்ப்புகளை உறுதி செய்ய ஒன்றிய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகள் என்னென்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார். இதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தில் இணை அமைச்சர் (தனி பொறுப்பு) ஜெயந்த் சௌத்ரி எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

இந்தியத் தணிக்கை மற்றும் பட்டயக்கணக்காளர் ஜெனரல் கம்ப்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் (CAG) PMKVY இன் செயல்திறன் தணிக்கையை 2022 வரை அதன் ஆரம்ப கட்டங்களை உள்ளடக்கியது மற்றும் தரவு சரிபார்ப்பு, பயனாளிகள் விவரங்கள், மதிப்பீட்டாளர் தகவல், தகுதி சரிபார்ப்பு மற்றும் கண்காணிப்பு செயல்முறைகள் தொடர்பான கொள்கை செயல்பாடு அமைப்புகளில் உள்ள சில குறைபாடுகளைக் தீவிரமானது என்று சுட்டிக்காட்டியுள்ளது..

PMKVY 4.0 இன் கீழ், ஆதார் அடிப்படையிலான eKYC, முக அங்கீகாரம் மற்றும் புவிகுறியிடப்பட்ட வருகை, QR குறியிடப்பட்ட டிஜிட்டல் சான்றிதழ்கள், ஸ்கில் இந்தியா டிஜிட்டல் வலைத்தளத்தில் நிகழ்நேர டாஷ்போர்டுகள், பலப்படுத்தப்பட்ட மதிப்பீட்டாளர் மற்றும் பயிற்சி மையத்தின் அங்கீகாரம், NCVET மூலம் சுயாதீனமான கண்காணிப்பு மையம், NCVET மூலம் பலப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மையம் உள்ளிட்ட விரிவான நடவடிக்கைகளை ஒன்றிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தெளிவான KPIகளுடன் வழிகாட்டுதல்கள், மற்றும் வலுவான அபராதம் மற்றும் மீட்பு கட்டமைப்பு.

இடைநிறுத்தம், தடுப்புப்பட்டியலில் சேர்த்தல், நிதி மீட்பு மற்றும் பிற கடுமையான நடவடிக்கைகள் உட்பட ஒழுங்கு நடவடிக்கைகள், இணக்கமின்மை நிறுவப்பட்ட இடங்களிலெல்லாம் எடுக்கப்பட்டுள்ளன, இதன் மூலம் திட்டத்தின் கீழ் வலுவான பொறுப்புக்கூறல், சரிபார்ப்பு மற்றும் மேற்பார்வை வழிமுறைகளை நிறுவனமயமாக்குகிறது.

PMKVY 4.0 இன் கீழ் தொழில்துறை இணைப்பு மற்றும் வேலை வாய்ப்பு வாய்ப்புகளை வலுப்படுத்த ஒன்றிய அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. PMKVY இன் கீழ் உள்ள படிப்புகள் வளர்ந்து வரும் துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் தொழில் துறை தலைமையிலான அமைப்புகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன. தொழில்துறை 4.0, ட்ரோன், செயற்கை நுண்ணறிவு (AI), ரோபாட்டிக்ஸ், மெகாட்ரானிக்ஸ் போன்ற வளர்ந்து வரும் துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் எதிர்காலத் தயாரான வேலைவாய்ப்பு தொழில் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்புக்கான அதிக வாய்ப்புகளை செயல்படுத்த, ஸ்கில் இந்தியா டிஜிட்டல் ஹப் (SIDH) கல்வித் திறன், ஒரு தளமாகத் தொடங்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோர் சூழல் அமைப்புகள் பரந்த அளவிலான பங்குதாரர்களை இலக்காகக் கொண்டு வாழ்நாள் முழுவதும் சேவைகளை வழங்குகின்றன. பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் விவரங்கள் SIDH போர்ட்டலில் சாத்தியமான தொழில் நிறுவனர்களிடமும் முதலாளிகளுடன் இணைவதற்குக் கிடைக்கின்றன.

ஸ்கில் இந்தியா டிஜிட்டல் ஹப் மூலம், வேட்பாளர்கள் வேலை மற்றும் பயிற்சி வாய்ப்புகளை அணுகலாம்.

மேலும், வேலைபயிற்சி (OJT) என்பது PMKVY இன் உள்ளார்ந்த அங்கமாக மாற்றப்பட்டுள்ளது. சான்றளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வேலை வாய்ப்பு வாய்ப்புகளை எளிதாக்க கௌசல் மஹோத்சவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

தமிழ்நாட்டில் உள்ள மகளிர் குடும்பத்திற்கு மகளிர் உரிமைத் தொகை ரூ.5000/- வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், தண்டலம் கிராமத்தில் மகளிர்களுக்கு மாவட்டச் செயலாளர்அமைச்சர் தா.மோ.அன்பரசன் இனிப்புகளை வழங்கி கொண்டாடி மகிழ்ந்தார். அருகில் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் அரசு ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அதற்கு துணைபோன அ.தி.மு.க.வை கண்டித்து

தாம்பரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன முழக்கம்!

சென்னை, பிப்.14-

தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அதற்கு துணைபோன அ.தி.மு.க.வை கண்டித்து சண்முகம் சாலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் மாவட்ட தலைவர் வி.ஆர். சிவராமன், அவர்கள் வரவேற்புரையில், தலைமை தீர்மான குழுச் செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் எக்ஸ். எம்.எல்.ஏ. மேலும் காங்கிரஸ் கமிட்டி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் ஆர். எஸ்.செந்தில்குமார், மனிதநேய மக்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் எம்.யாக்கூப் எம்.சி., மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர், பரிதிஇளம்சுருதி,

மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ். இந்திரன், பகுதி செயலாளர், எஸ்.சேகர், மாநகர பொருளாளர் வ.விஜயரங்கன், மாநகர துணை செயலாளர் பி.சதாசிவம், பகுதி செயலாளர்கள், இரா. சுரேஷ், ஆ.நடராஜன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோ.ஜெயவேல் கு.ராஜன்மணி மதிமுக கவிஞர்.மணிவேந்தன், விடுதலை சிறுத்தைகள் கட்சியிலன் மாவட்ட செயலாளர் பா.சாமுவேல் எபினேசர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட செயலாளர் எஸ்.சேக்அப்துல்காதர், திராவிடர் கழகம் ப.முத்தையன் தமிழக வாழ்வுரிமைக் கட்சிபி.பொன்ராஜ்,கொங்கு தேசிய மக்கள் கட்சி.ஆர்.ராமகிருஷ்ணன்,

மனிதநேய ஜனநாயக கட்சி,எம்,ஜாகிர்உசேன் எஸ்.டி.பி.ஐ,ராஜா முஹம்மது, தலைமை செயற்குழு உறுப்பினர்,ஆதிமாறன்,கி.வேல்மணி,எஸ்.ஜி.கருணகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள்,க.தேவேந்திரன்,ஆர்.எஸ் சங்கர், ஊராட்சி மன்ற தலைவர்,ஜனனி சுரேஷ்பாபு,அ.விநாயகமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர் கோபி,ரமணி ஆதிமுலம், பி.ஜோதிகுமார் ஆர். தாமோதரன் செ.சுரேஷ் லிங்கேஸ்வரிபாபு, சசிகலா கார்த்தி, எல்.பெரியநாயகம், இரா.செல்வகுமார், சிட்டலபாக்கம். ஏ.மனோகரன், இரா.விஜயகுமார், ஆர்.செல்வகுமார், எஸ். கார்த்திக், வீ.கார்த்திக், சி,பரிமளா, க.மு.சூர்யா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாநகர, பகுதி,நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களும், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என 5000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக ஜா. ரவிக்குமார் நன்றி தெரிவித்தார் .

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' நிறுத்தப்படும் என தவறான புரிதலை ஏற்படுத்த முயன்றவர்களுக்கு பதிலாக, கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3,000 மற்றும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2,000 என மொத்தம் ரூ.5,000 தொகை, 1.31 கோடி மகளிரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. மக்களின் வாழ்வுச் சுமையை குறைக்கும் மனிதநேய நடவடிக்கையாக இது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, நுங்கம்பாக்கம் பகுதியில் மகளிருக்கு இனிப்புகள் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார். மேலும், திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மகளிருக்கான உரிமைத்தொகை ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்ற முதலமைச்சர் அறிவிப்பு, மகளிர் சமூகத்தில் கூடுதல் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகளிர் உரிமைத் தொகை ரூ.5000/-

125வது வட்டத்தில் இனிப்பு வழங்கல்!

அ.தவநேசன் – ரேவதி எம்.சி. பங்கேற்பு!

சென்னை, பிப். 14-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் உரிமைத் தொகையை வங்கி கணக்கில் ரூ.5,000/- வழங்கியதை முன்னிட்டு மயிலை கிழக்கு பகுதி 125வது வட்டம், டாக்டர் அம்பேத்கர் பாலம் பகுதியில் நொச்சி குப்பம் பகுதியில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள், மகளிர் சகோதரிகளுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளர் அ.தவநேசன், மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, மாநில மீனவர் அணி துணை செயலாளர் மு.தம்பிதுரை, பகுதி கழக துணை செயலாளர்கள் எ.குமாரி, சீமன் சேகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன், வட்ட கழக நிர்வாகிகள் கே.கலையரசி, க.மணிகண்டன், மீனவர் அணி ஆர்.ராமலிங்கம், கு.ரவிச்சந்திரன், மாவட்ட துணை அமைப்பாளர் உ.துரைக்கண்ணு, மகளிர் அணி ஆர்.கிருஷ்ணவேணி, அன்பழகி, சிறுபான்மை அணி செ தீபன், ஜி.செழியன், எ.ஆனந்த், மூ.மணிமாறன், கிரிகிரஷ்ணன், ஆர்.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இன்று (14.02.2026) நடைபெறுகிறது!

குடிநீர் வாரிய பகுதி அலுவலகங்களில் குறை தீர்க்கும் கூட்டம்!

சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, பிப்.14-

சென்னை குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 14.02.2026 (சனிக்கிழமை) இன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னை குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 14.02.2026 (சனிக்கிழமை) இன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 - மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம், பகுதி அலுவலகம்-4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 - திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்,

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.